## கென்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்– 2017

---

கென்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியினதும் (''கம்பனி''), கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனி மற்றும் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தொகுதியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயங்கள் மீதான அழுத்தம்

எனது அபிப்பிராயத்தினை முனைப்பழி செய்யாது, ஹெலன்கோ ஹோட்டல்ஸ் என்ட் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் சிநோலங்கா ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய துணைக் கம்பனிகளுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களுக்கான பின்வரும் குறிப்புக்களுக்கு எனது கவனத்தைச் செலுத்துகின்றேன்.

**ஹெலன்கோ ஹோட்டல் என்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் 2.5 குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கம்பனியின் பணிப்பாளர் சபை ஹம்பாந்தோட்டையிலுள்ள ஹோட்டலின் நிர்மாணத்தினை கலைப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன் பொது முயற்சி அபிவிருத்தி அமைச்சு 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கென்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (தாய்க் கம்பனி) இலுள்ள அவர்களின் பங்குகளின் முதலீட்டு விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு கம்பனியின் பங்குகளினை மாற்றுவதற்கு அவர்களுக்கு அறிவுறுத்தல்களினை வழங்கியிருந்தனர். அறிக்கைத் திகதியிலுள்ளவாறு சுதந்திரமான மதிப்பீடு செயன்முறையில் காணப்பட்டதிலிருந்து, கம்பனியை பணமாக்குவதற்காக கலைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டது.

**சினோலங்கா ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பா (பிறைவேட் லிமிட்டட்)**

மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கிரான்ட் கயாட் கொழும்பினை (Grand Haytt Colombo) அகற்றுவதற்கு 2017 ஆகஸ்ட் 01 இல் (அமைச்சரவை தீர்மானம் 17/1613/733/029) அமைச்சரவை அங்கீகாரத்தினை அளித்திருந்தது. அத்துடன், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 471,653,072 இனால் நடைமுறைச் சொத்துக்களினை மிகைத்திருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுக்கான 20 ஆம் குறிப்பின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மூலதனச் செலவினத்திற்கான கடப்பாட்டின் தொகை ரூபா 25,877,629,779 ஆகக் காணப்படுகின்றது. மேலும், பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவைக் குழு 2018 சனவரி 10 இல் குறுங்காலக் கடனொன்றை (Bridging Loan) பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தியிருந்ததுடன் அதற்கமைய, கம்பனி நடைமுறை கடன்கொடுத்துத்தீர்ப்பனவை தீர்ப்பதற்கு ஐ.அ.டொலர் 45.3 மில்லியன் கடனொன்றினை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் காணப்படுகின்றது.

நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் 26 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2015 சனவரி 07 இல் அளிக்கப்பட்டு (ஒப்பந்தப் பெறுமதி யூரோ 28,869,372) 2015 மார்ச் 27 இல் இரத்துச்செய்யப்பட்ட உட்பகுதி அலங்கார ஒப்பந்தத்திற்கு இன்டேர்னா கென்டாக்ட் ஸ்பா

(இத்தாலி) இனால் கம்பனிக்கு எதிராக மத்தியஸ்தம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. செய்யப்பட்ட வேலைக்கு இன்டெர்னா கென்ராக்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் யூரோ 20,552,242 இனை கோரியிருந்ததுடன் ஒப்பந்த நிறைவேற்றலில் இலாப இழப்பும் ஏற்பட்டது. மேலும், மத்தியஸ்த செயன்முறையின் ஏற்பட்ட கிரயத்தினை மீளளிப்புச்செய்வதற்குகூட கோரப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் 29 இல் மத்தியஸ்தம் உரிமை கோருபவர்களுக்கு யூரோ 7,432,062.79 தொகையொன்றை கொடுப்பதற்கு தொடர்பாடப்பட்டது. எவ்வாறாயினும், இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பா இன் கோரிக்கைகளினை கேட்பதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு மத்தியஸ்தம் எவ்வித அதிகார வரம்புகளினையும் கொண்டுள்ளதில்லை என்ற அடிப்படையில் இலங்கையில் அளிக்கப்பட்ட மேற்குறித்த மத்தியஸ்த வற்புறுத்தலுக்கு கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பா இனால் தாக்கல்செய்யப்பட்ட இந்த செயற்பாடு கம்பனியின் முகாமைத்துவத்திற்கு சவாலாகக் காணப்படுகின்றது.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

(அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைப்பின் அடிப்படை

தொகுதி நிதிக்கூற்றுக்கள் கம்பனி மற்றும் சினோலங்கா ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய அதன் துணைக்கம்பனிகளின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களினை உள்ளடக்கியுள்ளதுடன் இரண்டு துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எல்எவ்ஆர்எஸ் / எல்கேஎஸ்) பிரகாரம் கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு துணைக்கம்பனிகளும் கம்பனியின் முழுமையான உரிமைத்துவத்தினைக்கொண்ட துணைக்கம்பனிகளாகக் காணப்படுகின்றன.

## 2.2.2 பங்கு மூலதனமும் உரிமையும்

கம்பனியின் மிக நெருங்கிய தலைமை பொறுப்பேற்கும், கட்டுப்படுத்தும் கம்பனி மற்றும் இறுதி தாய்க் கம்பனியாக, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக சிறிலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட் காணப்படுகின்றது.

கம்பனியின் பங்கு மூலதனத்திற்கு சிறிலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட், ஊழியர் சேமலாப நிதியம், லிற்றோ கேஸ் லங்கா லிமிட்டட் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோர் பங்களிப்புச் செய்திருந்தனர்.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.1 ஆம் பிரிவு | 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகள் 2018 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி 2018 ஏப்ரல் 26 இல் மாத்திரமே அதன் வருடாந்த கணக்குகளினை சமர்ப்பித்திருந்தது. |
| | (ii) 7.4.5 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு வருடாந்த அளவைச் சபை நியமிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அளவைச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி பிஈடீ 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | முகாமைத்துவ பணிப்பாளரின் சம்பளம், பிரதம நிதி உத்தியோகத்தரின் வாகனப் படி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளரின் மிகையூதியம் / ஊக்குவிப்பு படிகளுடன் தொடர்புடைய பிஏவைஈ வரிகள் ஊழியர்களின் உழைப்புக்களிலிருந்து கழிப்பனவுசெய்யப்பட்டிராது செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்டது) 113 ஆம் பிரிவு | சுயமாக மதிப்பிடப்பட்ட காலாண்டு வருமான வரி செலுத்துகைகள் 2017/2018 ஆம் மதிப்பாண்டிற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய திகதிகளில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகளினை அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான கம்பனியினதும் தொகுதியினதும் முறையே ரூபா 85,879,218 மற்றும் ரூபா 214,113,763 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 230,218,562 மற்றும் ரூபா 96,399,749 வரிக்கு முன்னரான தேறியலாபமொன்றை விளைவித்திருந்தமையால் முறையே ரூபா 144,339,344 இனால் கம்பனியின் நிதிசார் விளைவுகளில் முன்னேற்றமொன்றையும் ரூபா 117,714,014 இனால் தொகுதியின் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறைவையும் சுட்டிக்காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 நிதிசார் விளைவுகளின் பொழிப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகுதி | | | கம்பனி | | |
| | ரூபா | | மாற்றம் | ரூபா | | மாற்றம் |
| | 2017 | 2016 | % | 2017 | 2016 | % |
| ஏனைய வருமானம் | 8,781,359 | 150,837,363 | -94 | 200,000,000 | 80,000,000 | 150 |
| நிர்வாகச் செலவினங்கள் | (114,651,109) | (141,351,666) | -19 | (7,869,759) | (8,242,318) | -5 |
| இருப்பின் நட்டக்கழிவு | (6,027,860) | - | -100 | - | - | - |
| நிதி வருமானம் | 208,297,358 | 204,628,067 | 2 | 38,088,317 | 14,121,535 | 170 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 96,399,749 | 214,113,763 | -55 | 230,218,562 | 85,879,218 | 168 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஏனைய வருமானம் ஹொலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்ட முறையே 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 80 மில்லியன் தொகையான பங்கிலாப வருமானத்தினை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) பிரதானமாக துணைக்கம்பனிகளிடமிருந்தான பங்கிலாப வருமானம் அதிகரித்தமை காரணமாக ரூபா 85 மில்லியனிலிருந்து ரூபா 230 மில்லியன் வரை வருமான வரிக்கு முன்னரான இலாபம் அதிகரித்திருந்த. எவ்வாறாயினும், சிநோ லங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் துணைக்கம்பனிக்கு நிதிகளினை விடுவிக்கும் நோக்கத்திற்கு அலகு நம்பிக்கை முதலீடு மற்றும் ஏனைய முதலீடுகளினை திரும்பப்பெற்றமை காரணமாக ஒன்றிணைந்த வரிக்கு முன்னரான இலாபம் குறைவடைவொன்றை காட்டுகின்றது.

### 3.2.2 நிதி நிலைமைக் கூற்று

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதி நிலைமையின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகுதி | | | கம்பனி | | |
| | ரூபா | | மாற்றம் | ரூபா | | மாற்றம் |
| | 2017 | 2016 | % | 2017 | 2016 | % |
| மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 19,227,469,595 | 16,630,826,307, | 16 | 18,500,182,531 | 18,500,685,975 | 0 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 1,653,757,990 | 3,542,779,146 | -53 | 410,118,815 | 1,528,430,576 | -73 |
| மொத்த உரிமை மூலதனம் | 19,565,448,069 | 19,565,519,986 | 0 | 18,851,958,904 | 18,705,099,322 | 1 |
| மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 4,573,161 | 2,876,667 | 59 | 300,101 | 241,649 | 24 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,315,779,516 | 608,085,465 | 116 | 58,342,442 | 1,324,917,229 | -96 |

(அ) ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் குறைப்பிலிருந்து பணத்தினைப் பெற்ற பின்னர் சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் துணைக் கம்பனியிலிருந்து பெறவேண்டிய தொகையினை தீர்ப்பனவுசெய்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 73 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு மொத்த நடைமுறைச் சொத்துக்கள் குறைவடைந்திருந்தது.

(ஆ) சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டில் காசுப்பாய்ச்சல் கஷ்டங்கள் காரணமாக ஆண்டின் போது ரூபா 505 மில்லியனிலிருந்து ரூபா 1073 மில்லியன் வரை செலுத்தவேண்டிய நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிர்மாண வேலைகள் அதிகரித்திருந்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 116 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

சினோ லங்கா ஹோட்டல்ஸ் அன்ட ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் பங்கு மூலதனத்தில் கம்பனியினால் ரூபா 1,450 மில்லியன் மற்றும் ரூபா 400 மில்லியன் தொகையொன்று முதலீடு செய்யப்பட்டிருந்தது. கிரான்ட் ஹயாட் கொழும்பு மற்றும் கிரான்ட் ஹயாட் ஹம்பாந்தோட்டையின் நிர்மாணங்களினை சிறிலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) ஹயாட் றிஜன்சி ஹம்பாந்தோட்டை ஹோட்டலின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் பிரகாரம் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டல் செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு 2011 திசெம்பர் 21 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஹயாட் றிஜன்சி ஹம்பாந்தோட்டை ஹோட்டலில் முதலீடுசெய்வதற்கு எவ்வித அமைச்சரவை அங்கீகாரமும் காணப்படாதுடன் 2015 மார்ச் இற்கு முன்னர் பூர்வாங்க நிர்வாக செயற்பாடுகள் இடம்பெற்றது பற்றிய சபைக் கூட்டங்கள் தொடர்பில் எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை.

(ii) பற்றாக்குறையான காசுப்பாய்ச்சல் காரணமாக தற்போதைய பணிப்பாளர் சபையினால் 2015 ஆகஸ்ட் இற்கு பின்னர் ஹோட்டல்களின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது.

#### (ஆ) கிரான்ட் ஹயாட் கொழும்பு ஹோட்டலின் நிர்மாணம்

பற்றாக்குறையான காசுப்பாய்ச்சல் மற்றும் கிரான்ட் ஹயாட் கொழும்பு ஹோட்டலினை அகற்றுவதற்கு 2017 ஆகஸ்ட் 01 இல் அமைச்சரவையின் அங்கீகாரம் (அமைச்சரவை தீர்மானம் 17/1613/733/029) அளித்திருந்தமை காரணமாக கிரான்ட் ஹயாட் கொழும்பின் நிர்மாணம், தற்போது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

### 4.2 அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

எவ்வித சபை அங்கீகாரமும் இன்றி 2012 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இன்றீச் ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் கூட்டிணைப்பு செலவினங்களாக கம்பனிக்கு ரூபா 758,402 தொகையொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

செயலாற்றல் மதிப்பீட்டிற்கான உள்ளக ஞாபனக்குறிப்பினால் வேண்டப்பட்டவாறு முறையானதொரு நடைமுறையினைப் பின்பற்றியிராது ஊக்குவிப்புப் படி / மிகையூதியமாக தொகுதியின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,923,105 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

(அ) பொது முயற்சி திணைக்களத்தின் மனித வள உபகுழுவினால் விநியோகிக்கப்பட்ட 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், முகாமைத்துவ பணிப்பாளராருவர்க்கான அங்கீகரிக்கப்பட்ட ஊதியப்பொதி ரூபா 250,000 ஆகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனியின் பணிப்பாளர் சபை மேற்குறித்த வழிகாட்டலினை புறக்கணித்து முகாமைத்துவ பணிப்பாளர்க்கு தேறிய சம்பளமாக ரூபா 400,000 தொகையொன்றை அங்கீகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகமான தனிநபர் கோவைகள் பேணப்பட்டிருக்காததுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீடு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் பொது முயற்சிக்கான கணக்காய்வுக் குழு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது தொடர்ச்சியான அடிப்படையில் சந்தித்தல் வேண்டும். எவ்வாறாயினும், ஆண்டின் போது இரண்டு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 6.3 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கு பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலகரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வங்கி இணக்கம் | வங்கி இணக்கங்கள் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) செலுத்துகை நடைமுறை | செலுத்துகைகள் மீது முறையானதொரு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நாளேட்டுப் பதிவுகளினை பதிவுசெய்தல் | நாளேட்டுப் பதிவுகளுக்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கணக்கீட்டு முறைமைக்குள் பதிவிடப்படுகின்றமை. |